செ.வெ.எண்: 51 / மார்ச் நாள்: 31.03.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## மாற்றுத்திறனாளிகள் சிரமமின்றி வாக்களித்திட அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் சிறப்பு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

## மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (31.03.2016), மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலம் பிரெய்லி முறையில் தயாரிக்கப்பட்டுள்ள கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான வாக்காளர் விழிப்புணர்வு கையேடுகளை வழங்கினார்.

அதன்பின்பு செய்தியாளர்களிடம் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-ஐ முன்னிட்டு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகளும், தேர்தல் முன்னேற்பாடு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேர்தல் வாக்குப்பதிவிற்காக மாவட்டத்தில் மொத்தம் 1307 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்தம் 17,000 மாற்றுத்திறனாளிகள் உள்ளதாகவும், அவர்களில் சுமார் 2000 நபர்கள் கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் எனவும் கண்டறியப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள் சிரமமின்றி வாக்களித்திட ஏதுவாக அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் சாய்வுதளம் (Ramp), கண்பார்வையற்றோர் வாக்களித்திட ஏதுவாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பிரெய்லி எழுத்தில் ஒட்டுவில்லைகள் (Stickers) ஒட்டுதல் போன்ற சிறப்பு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர மாற்றுத்திறனாளிகள் அதிகம் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ள பகுதிகளில் 258 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாக்குச்சாவடி மையங்களில் மாற்றுத்திறனாளிகள் சிரமமின்றி வாக்களித்திட அவர்களுக்கு உதவியாக தனிநபர் நியமிக்கப்பட்டு, சக்கர நாற்காலி போன்ற வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் தேர்தல் நடைமுறைகள் குறித்து விழிப்புணர்வு பெற்றிடும் வகையில் இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலம் பிரெய்லி எழுத்தில் தயாரிக்கப்பட்டுள்ள வாக்காளர் விழிப்புணர்வு குறித்த கையேடு வழங்கப்படுகிறது. இதன்மூலம் அவர்கள் வாக்காளர் பெயர் பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தம் செய்தல், நீக்கம் செய்தல் உள்ளிட்டவற்றிற்கான நடைமுறைகளை தாங்களே கற்றறிந்து கொள்வதோடு பிறருக்கும் கற்பித்து தங்களது தன்னம்பிக்கையினை உயர்த்திக் கொள்ள வாய்ப்பாகவும் அமைகிறது என மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலி அக்பர், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.சி.தங்கவேல் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**